# தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி (வரை), தருமபுரி

ந.க.எண்.1369/ 03 வளர்ச்சி

நாள். 22.10.2019

## குறிப்பாணை

பொருள் : சட்டபூர்வ நடவடிக்கை - வங்கியின் கிளைகளில் நேரடியாக வழங்கப்பட்ட கடன்களில் தவணை தவறிய கடன்கள் மீது சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளுதல் - கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் அனுப்பிவைத்தது - நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட விபரத்தை கோருதல் -தொடர்பாக.

பார்வை : வங்கியின் சுற்றறிக்கை ந.க.எண்.131/2012/கடன்கள் நாள்.14.08.2019.

------------

பார்வையில் காணும் வங்கியின் சுற்றறிக்கையில் வங்கியில் நேரடியாக வழங்கப்பட்ட கடன்களில் தவணை தவறி நிலுவையுள்ள கடன்கள் மீது சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளுவது குறித்து தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட விவரத்தையும் படிவம் வாயிலாக கோரப்பட்டிருந்தது. ஆனால் நாளது வரையில் ஒரு கிளையில் கூட மேற்படி படிவம் வங்கிக்கு வரப்பெறவில்லை. இது மிகவும் கண்டிக்கதக்கது.

மாதாந்திர ஆய்வு கூட்டத்திற்காக கிளைகளில் தவணை தவறி நிலுவையிருக்கும் கடன்களின் எண்ணிக்கை குறித்த விவரங்களை அனுப்பப்பட்டுள்ளன. இவ்வெண்ணிக்கைக்கும் கணினி மூலம் (CBS) எடுக்கப்பட்ட எண்ணிக்கைக்கும் அதிகளவில் வித்தியாசம் உள்ளது. கிளை மேலாளர்கள் இனிவரும் காலங்களில் பிரதி மாதம் 5-ம் தேதிக்குள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் தவணை தவறிய கடன்கள் (கூட்டுறவு சங்கங்கள் நீங்கலாகவும், தனிநபர் / நிறுவனக் காசுக்கடன்கள் உட்பட) மீது மேற்கொள்ளப்பட்ட சட்டபூர்வ நடவடிக்கை விவரம் / சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளாது தொடர்பான விவரத்தினை படிவத்தில் பூர்த்தி செய்து கணினியில் (CBS) உள்ள நிலுவைக்கு நேர்செய்து புள்ளிவிவரங்களை அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

தவணை தவறிய கடன்கள் மீது சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட விவரத்தினை 29.10.2019 மாலை 3.00 மணிக்கு தலைமையகத்தில் ஆய்வு கூட்டம் நடத்தப்படவுள்ளதால் திருந்திய புள்ளி விவரங்களை உடன் மறு அஞ்சலில் தலைமையக வளர்ச்சி பிரிவிற்கு அனுப்பிவைக்க தெரிவிக்கப்படுகிறது.

தவணை தவறிய கடன்களின் எண்ணிக்கையை குறைத்து புள்ளி விவரங்கள் அனுப்பும் கிளை மேலாளர்கள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள நேரிடும் என்பதையும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு :-
மேற்கண்டவாறு

ஒம்./-கி.ரேணுகா
இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர்

பெறுநர் :-

1. அனைத்து கிளை மேலாளர்கள்
2. கூட்டுறவு சார்பதிவாளர் (நிறைவேற்றல் மற்றும் கலைத்தல்) தலைமையகம்.
3. அனைத்து தலைமையக பிரிவு மேலாளர்கள் - (இதில் வளர்ச்சி பிரிவு மேலாளர் சட்டபூர்வ நடவடிக்கைக்கு தேவையான அனைத்து படிவங்களையும் போதுமான அளவு அச்சிட்டு இருப்பு உள்ளதை கவனத்தில் கொள்ள வேண்டும்)

/உண்மை நகல்/

22/10/19
மேலாளர்(வளர்ச்சி)